تاميلي

தமிழ்

MahadSunnah

معهد السنة
As-Sunnah College

# قضاء الحاجة آداب وأحكام

# மலசல தேவைகளை நிறைவேற்றுவதன் சட்டங்களும், ஒழுங்குகளும்.


ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

## மலசல தேவைகளை நிறைவேற்றுவதன் சட்டங்களும், ஒழுங்குகளும்.

இஸ்லாம் ஒரு முஸ்லிம் எப்போதும் அக, புறச் சுத்தங்களை பேணுமாறு தூண்டுகிறது. உடல்,உடை, இடம், சுற்றுச்சூழல் ஆகிய அனைத்தும் அசுத்தங்கள் அனைத்திலிருந்தும் தூய்மையாக இருக்கவேண்டும் என வலியுறுத்தப்படுவது இஸ்லாம் ஒரு அழகும், தூய்மையும் மிக்க மார்க்கம் என்பதை பறைசாற்றுகின்றது. நபி (ஸல்)அவர்கள் சுத்தம் ஈமானின் பாதி என கூறினார்கள். (முஸ்லிம்:223)

இஸ்லாம் மக்கள் இளைப்பாறும் இடங்களிலும், பயணிக்கும் வழிகளிலும் ஒரு முஸ்லிம் தன் தேவையை நிறைவேற்றுவதை தடை செய்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் சாபத்தை உண்டாக்கும் அம்சங்களை தவிர்ந்து கொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டார்கள். அப்போது சாபத்துக்குள்ளாக்கும் அம்சம் எது? என வினவப்பட்டது; அதற்கு "யார் மனிதர்கள் பயணிக்கும் வழியிலோ, அல்லது அவர்கள் நிழல் பெறும் இடத்திலோ மலசல தேவையை கழிக்கிறார்களோ அவர்களே எனக் கூறினார்கள். (முஸ்லிம்:269)

ஒரு முஸ்லிம் தன் மலசல தேவையை தேங்கி நிற்கும் நீரில் கழிப்பதை அது மாசுபடும் என்பதற்காக இஸ்லாம் தடை செய்துள்ளது.

ஒரு ஹதீஸில் “தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் கழிப்பதை நபி (ஸல்) தடை செய்ததாக வந்துள்ளது.”

(முஸ்லிம்:281)

இதற்காகத்தான் முஸ்லிம்களுக்கு இஸ்லாம் மலசல தேவைகளை நிறைவேற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும், சட்டங்களையும் வகுத்துள்ளது.

அவற்றில்,

- சிறுநீர் கழிக்கும் போது அது ஆடையில் தெறித்து விடாமல் அவதானமாக செயல்படுமாறு வழிகாட்டியுள்ளது.

நபி (ஸல்) கூறினார்கள்:

" சிறுநீரில் இருந்து நன்கு சுத்தமாகிக் கொள்ளுங்கள், மண்ணறை வேதனையில் அதிகமானது அதனாலேயே ஏற்படுகின்றது. *(ஸஹீகுல் ஜாமிஃ:3002)*

- அவ்வாறே மலசல தேவையை நிறைவேற்றிய பின் அசுத்தத்தை நீராலோ அல்லது சுத்தமான கற்களாலோ அல்லது டிசுக்களாலோ முற்றாக நீக்குவது அவசியமாகும்.
- மல ஜல தேவையை நிறைவேற்றும்போது தனது வலது கையை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

நபி (ஸல்) கூறினார்கள்:

உங்களில் ஒருவர் வெளிவாசலுக்குச் சென்றால் தன் அபத்தை வலதுகையால் தொடவேண்டாம். (முஸ்லிம்:267)

அவ்வாறே மலசல தேவைகளை நிறைவேற்றும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகளை பார்ப்போமாயின்,

- மலசல கூடத்தில் நுழையும் போதும் ,வெளியேறும் போதும் சுன்னத்தான துஆவை கூற வேண்டும் .

நபி (ஸல்) அவர்கள் மலசல கூடத்துக்குள் நுழைந்தால் (அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குப்தி வல் கபாயிஃதி) என்று கூறுவார்கள். *(புகாரி:142)*

- வெளியேறும் போது "குஃப்ரானக்க" என்றும் கூறுவார்கள். (பூதாவூத்:30)
- மேலும் கிப்லாவை முன்னோக்கியோ பின்னோக்கியோ மலசல தேவையின் போது உட்காரக்கூடாது.

நபி (ஸல்) கூறினார்கள்:

"உங்களில் ஒருவர் மலசல கூடத்தில் நுழைந்தால் கிப்லா திசையை முன்னோக்கவோ பின்னோக்கவோ வேண்டாம். ஆனால் கிழக்கு அல்லது மேற்கு திசையை நோக்கி உட்காருங்கள்." (புகாரி:144)

- அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்ட எதையும் தன்னுடன் எடுத்துச் செல்லக்கூடாது.
- அல்லாஹ்வின் நாமத்தை நாவினால் மலஜல தேவை நிறைவேற்றும்போது கூறக்கூடாது.
- பிறருக்கு முன் தன் மறைவிடத்தை வெளிப்படுத்தாது மறைத்துக் கொள்ள வேண்டும்.

**நபி (ஸல்) கூறினார்கள்:**

**உன் அவவ்ரத்தை பாதுகாத்துக்கொள்.** (இப்னு மாஜாஃ:1572)

**நிச்சயமாக தூய்மையும் சுத்தமும் உள்ளத்திற்கும், தான் வாழும் சூழலுக்கும் அவசியமாகும். அது அல்லாஹ்வின் அன்பை பெற்று தரும். அல்லாஹ் குபாஃ பள்ளிவாசிகளை புகழ்ந்து கூறும் போது பின்வருமாறு கூறுகின்றான்:**

فِيهِ رِجَالٌ يُحِبُّونَ أَن يَتَطَهَّرُوا ۚ وَاللَّهُ يُحِبُّ الْمُطَّهِّرِينَ (108)

***அங்கே சிலர் உள்ளனர் அவர்கள் தூய்மையாக இருப்பதை விரும்புகின்றனர். அல்லாஹ் தூய்மையானவர்களை விரும்புகின்றான்.***

(தவ்பா:108)